ஆவினில் செறிவூட்டப்பட்ட பசும் பால் அறிமுகம்



வைட்டமின் A மற்றும் D செறிவூட்டப்பட்ட பால், உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதிலும், கண்பார்வையை மேம்படுத்துவதிலும் மற்றும் எலும்புகளை உறுதிப்படுத்துவதிலும் பங்கு வகிக்கின்றது. பாலில் கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் சத்துக்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. இந்த சத்துக்கள், எலும்பு மற்றும் பல் வளர்ச்சிக்கு இன்றியமையாதவையாகும். மேலும் உடலுக்கு தேவையான கால்சியத்தை பெற்றுத் தருவதில் வைட்டமின் D பங்களிப்பதினால், பாலில் வைட்டமின் D செறிவூட்டம் செய்வது மிகுந்த பயனளிப்பதாக இருக்கும் என இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

இதன் அடிப்படையில் வைட்டமின் A மற்றும் D செறிவூட்டப்பட்ட பால் அறிமுகப்படுத்தப்படும் என சட்டசபை கூட்டத் தொடரில் பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித்துறை மானியத்தின்போது அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையிலும் வாடிக்கையாளர்களின் நலன் கருதியும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில், வைட்டமின் A மற்றும் வைட்டமின் D செறிவூட்டம் செய்யப்பட்ட பசும் பால் (பர்ப்பிள் நிற பால் பாக்கெட்) இன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை தொடக்கம்: தோனி தொடர்ந்து விளையாட முதல்வர் ஸ்டாலின் விருப்பம்

**சென்னை:** தமிழக அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் 'தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை' தொடக்க நிகழ்ச்சி சென்னையில் நேற்று நடந்தது.

நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல்வர்மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை தொடங்கி வைத்து, 'முதலமைச்சர் கோப்பை போட்டிகள் 2023'-க்கான வீரன் சின்னம், கருப்பொருள் பாடல் மற்றும் டி-ஷர்ட் ஆகியவற்றை வெளியிட்டார். அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், தங்கம்தென்னரசு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்கள், அரசு உயர் அதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.



# ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரருக்கான Laureus விருதை வென்றார் மெஸ்ஸி!

**பாரிஸ்:** ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரருக்கான Laureus விருதை வென்றார் அர்ஜென்டினா கால்பந்தாட்ட அணியின் கேப்டன் மெஸ்ஸி. பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் நடைபெற்ற Laureus விருது வழங்கும் விழாவில் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் விளையாட்டு உலகில் சிறந்து விளங்கும் வீரர், வீராங்கனை மற்றும் அணிக்கு Laureus விருது வழங்கப்பட்டு வருகிறது. 2000-மாவது ஆண்டு முதல் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு அர்ஜென்டினா அணி கால்பந்தாட்ட உலகக் கோப்பையை வென்று அசத்தி இருந்தது. அதனால் ஆண்டின் சிறந்த அணிக்கான விருதை அர்ஜென்டினா வென்றுள்ளது. இதன் மூலம் தனிநபர் மற்றும் அணி என இரண்டு விருதினை மெஸ்ஸி இந்த முறை வென்றுள்ளார். கடந்த 2020-ல் லூயிஸ் ஹாமில்டனுடன் இணைந்து சிறந்த விளையாட்டு வீரருக்கான Laureus விருதை மெஸ்ஸி பெற்றிருந்தார்.

ஜமைக்காவின் தடகள வீராங்கனை ஷெல்லி-ஆன் ஃப்ரேசர்-பிரைஸ் ஆண்டின் சிறந்த வீராங்கனைக்கான விருதை வென்றார். டென்மார்க்கின் கால்பந்தாட்ட வீரர் எரிக்சன் களத்தில் கம்பேக் கொடுத்தமைக்காக 'கம்பேக் ஆப் தி இயர்' விருதை வென்றார். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த டென்னிஸ் விளையாட்டு வீரர் கார்லோஸ் அல்கராஸ் 'பிரேக் த்ரூ ஆப் தி இயர்' விருதை வென்றார்.

ஃப்ரீஸ்டைல் ஸ்கையரான அமெரிக்காவின் 19 வயது வீராங்கனை எலைன் கு, ஆக்ஷன் விளையாட்டு பிரிவில் விருது பெற்றார். கேத்தரின் டெப்ரன்னர், மாற்றுத்திறனாளி விளையாட்டு வீராங்கனை பிரிவில் விருது பெற்றார்.

## ட்ரிப்பிள் ஜம்பில் தமிழக வீரர் பிரவீன் சித்ரவேல் தேசிய சாதனை: 17.37 மீட்டர் கடந்து அசத்தல்!




**ஹவானா:** தமிழ்நாட்டை சேர்ந்த 21 வயதான தடகள வீரர் பிரவீன் சித்ரவேல், ட்ரிப்பிள் ஜம்பில் புதிய தேசிய சாதனை படைத்துள்ளார். கியூபாவின் ஹவானாவில் நடைபெற்ற 'ப்ரூபா டி காண்ஃப்ரான்டேசியன் தடகள மீட்'-டில் 17.37 மீட்டர் தூரம் கடந்து இந்த சாதனையை அவர் படைத்துள்ளார். இதன் மூலம் இந்தப் போட்டியில் தங்கம் வென்றுள்ளார். இருப்பினும் இதனை இந்திய தடகள கூட்டமைப்பு முறைப்படி அங்கீகரிக்க வேண்டி உள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த அவர் இதில் 17 மீட்டருக்கு மேல் நான்கு முறை கடந்துள்ளார். முதல் முயற்சியில் 17.14 மீட்டர், நான்காவது முயற்சியில் 17.08 மீட்டர், ஐந்தாவது முயற்சியில் 17.37 மீட்டரை அவர் கடந்தார். அதோடு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெற உள்ள உலக தடகள சாம்பியன்ஷிப் தொடருக்கு அவர் தகுதி பெற்றுள்ளார். இதற்கான தகுதி 17.20 மீட்டர் என அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, கடந்த மார்ச் மாதம் 17.17 மீட்டர் கடந்து ஆசிய விளையாட்டுக்கு அவர் தகுதி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சனிக்கிழமை அன்று அவர் தங்கம் வென்றுள்ளார்.

EVA STALIN IAS ACADEMY